## 30

# உவமை என்றால் என்ன?

## (அதிகாரம் 13)

அதிகாரம் 13ல், மத்தேயு மறுபடியும் ஒருமுறை மாற்றுப்பாடத்துக்குக் கடந்து போகிறார், இப்பொழுது பரிசேயர்களுடன் இயேசுவுக்கு இருந்த முரண்பாட்டைத் தாண்டி மீண்டும் அவருடைய உபதேசத்தைத் தொடர்வதாகக் காட்டுகிறார். இந்த முறை, எப்படியிருப்பினும், இயேசுவின் உவமைகளில் கவனம் செலுத்தி எழுதுகிறார் மத்தேயு.

உவமை என்றால் என்ன? *Parabolē* என்னும் வார்த்தை "ஒன்றின் பக்கத்தை எடுத்துக் காட்டுவது" என்ற பொருளைக் கொடுக்கும் ஒரு தொகுப்பு வார்த்தை இது. எளிமையாகச் சொல்ல வேண்டுமானால், அறியப்படாத ஒன்றை அறிந்த உண்மையைக் கொண்டு விளக்கமளிப்பதுதான் உவமை. இந்த விஷயத்தில் ஆவிக்குரிய சத்தியங்கள் ஆழ்ந்து ஆராயப்படுகிறது. நன்கு அறியப்பட்ட ஒரு விளக்கத்தைப் பயன்படுத்த வேண்டுமானால், "பரலோகத்துக்குரிய அர்த்தத்தை பூமிக்குரிய கதையால் விளக்குவது" என்று நாம் சொல்லலாம்.

உவமையில் இயேசு மட்டுமே போதித்த முதல் நபர் அல்ல. யூத மதப் போதகத்தின் பொதுவாக இந்த முறைதான் கையாளப்பட்ட ஒரு அமைப்பு, பழைய ஏற்பாட்டின் காலத்தில்[1] அடிக்கடிப் பயன்படுத்தப்பட்டது! "உவமைக்கு" பழைய ஏற்பாட்டு எபிரெய வார்த்தை *மாஸால்*, இவ்வார்த்தை "ஏற்றுகொள்ளப்பட்ட பொது உண்மை, நீதிமொழி (பழமொழி), சொல் வழக்கு, ஒப்பீடு, ஞானார்த்தம், புனைக்கதை, விடுகதை என்றெல்லாம் பொருள்படும்."[2] அதேபோல உவமையை "பழமொழியாக (லூக்கா 4:23), விடுகதையாக (மாற்கு 13:23), ஒப்பீடாக (மத்தேயு 13:33), வித்தியாசங்களை சுட்டிக்காட்டல் (லூக்கா 18:1-8), மற்றும் எளிமையான கதைகள் (லூக்கா 13:6-9) மற்றும் சிக்கல் மிகுந்த கதைகள் (மத்தேயு 22:1-14)" ஆகியவற்றை பயன்படுத்துவது.[3] பிற யூத இலக்கியங்களிலும் உவமைகளுக்கான குறிப்புகள் காணப்படுகிறது, கிறிஸ்துவுக்கு முன்பும் பின்பும் எழுதப்பட்டவைகள் அவைகள்.[4] இந்த முறையில் போதிப்பதில் இயேசு நிறைவு பெற்றிருந்தார், அதன் பயன்பாட்டில் எஜமானனாகவும் இருந்தார்.

உவமை எனும் பதம் முதலாவதாக 13:3ல் பயன்படுத்தப்பட்டது, அந்த அதிகாரத்தில் பன்னிரெண்டு முறை காணப்படுகிறது. இயேசு "அநேகக் காரியங்களை ... உவமையாகப் பேசினார்" என்று மத்தேயு எழுதினார். பின்னதாகச் சொன்னார், "இவைகளையெல்லாம் இயேசு ஜனங்களோடே உவமைகளாகப் பேசினார்; உவமைகளினாலேயன்றி, அவர்களோடே பேசவில்லை" (13:34). மற்ற சம்பவங்களிலே அவர் உவமை களின்றி பேசினார்; ஆகிலும் இந்த சம்பவத்தில், அவர் உவமைகளோடே மட்டுமே பேசினார். இயேசு இப்படி போதிக்க தெரிவு செய்ய இரண்டு

காரணங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. முதலாவதாக ஜனத்தார் ஆவிக்குரிய சத்தியங்களை அறிந்து கொள்ளக் கூடாமல் இருந்தார்கள் (13:10-17). இயேசு இந்த சத்தியங்களை தம்முடைய சீஷர்களுக்கு வெளிப்படுத்தினார்; ஆனால் அவர் உவமைகளை பயன்படுத்தியதால், பெருங்கூட்டத்தின் இருதயக் கடினத்தினிமித்தம் அவர்களிடம் பேசாமல் இருந்தார். இரண்டாவது காரணம் மேசியா அப்படிப்பட்டக்கதைகளைப் பயன்படுத்தி போதிப்பார் என்று சொல்லப்பட்டிருந்த தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றினார் (13:34, 35; சங்கீதம் 78:2).

"கேளுங்கள்" என்ற வார்த்தை அமைப்பு பதினைந்து முறை அதிகாரம் 13ல் (*akouō*) பயன்படுத்தப்பட்டுள்ளது. ஜாக்கிரதையாய் கவனித்துக் கேட்டல் மூலமே புரிந்து கொள்ளக் கூடும் என்ற முக்கியத்துவத்தை வலியுறுத்தும்படி - இயேசு அநேக வித்தியாசப்பட்ட அறிவுரையையும் - ஆசீர்வாதங்களையும் கூட அளித்தார் (13:9, 16, 18, 43).

இந்த அதிகாரத்தில் இடையுறவு உவமையும் ஏழு அல்லது எட்டு இடங்களில் காணப்படுகிறது,[5] ஆனால் ஒப்பீடுகள் சாதாரணமானவையல்ல. இயேசு தமது சீஷர்களிடம் "பரலோக இராஜ்யத்தின் இரகசியங்களை அறிந்து கொள்ளும்படி" உவமைகள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார் (13:11). நமக்கு, பரலோக இராஜயத்தின் துவக்கத்தை அவை வெளிப்படுத்துகின்றன, அதின் தன்மை, அதின் வளர்ச்சி, மற்றும் பரவுதல், அதின் மதிப்பு, மற்றும் அதின் நோக்கம் ஆகியவையும் வெளிப்படுகிறது. மேலும் கிறிஸ்துவையும் அவருடைய இராஜ்யத்தையும் புறந்தள்ளுபவர்களுக்கு எதிராக இறுதியாகக் கிடைக்கப்போகும் நியாயத்தீர்ப்பையும் கூட அவை அறிவிக்கின்றன.

அதிகாரம் 13ல் சொல்லப்படும் உவமைகளைத் தொடர்ந்து இயேசு யூதமதத் தலைவர்களை எதிர் கொள்ளும் சம்பவம் வருகிறது. இந்த உவமைகள் பரலோக இராஜ்யத்தைப் பற்றிய அவருடைய போதனையையும் அவரைப் பின்பற்றத் தேவையான கட்டளைகளையும் விளக்கப்படுத்துகின்ற வார்த்தைப்பட வரை படங்களாகும். இந்தக் கதைகள் இயேசுவுக்கு செவிகொடுத்து வந்த மக்களுக்கு ஒரு அறைகூவல் விடுத்து அவர்களுடைய ஆதரவு யாருக்கு என முடிவு செய்யும் படி செய்யப்பட்டது: அவருக்கா அல்லது பரிசேயர்களுக்கா? அவர்கள் நல்ல நிலங்களா அல்லது கற்பாறையான நிலமா? அவர்கள் விளைந்த கோதுமை கதிர்களா அல்லது களைகளா? தேவனுடைய இராஜ்யத்தை பொக்கிஷமாக மதிப்பார்களா?

உவமைகளையும் அவைகளின் முக்கியமான குறிப்புக்களையும், பின் வரும் சாராம்ஸங்களாகக் காணலாம்:

1. *விதைப்பவன்:* தேவனுடைய வசனம் ஒரு விதையைப் போல் ஜனங்களுக்குள்ளாக விதைக்கப்படுகிறது. அவர்கள் வித்தியாசப்பட்ட நிலைகளில் அவைகளை ஏற்றுக்கொள்ளுகின்றனர்.
2. *களைகள்:* நன்மையும் தீமையும் கடைசி நியாயத்தீர்ப்பு நாள் வரை போராடிக் கொண்டிருக்கும்.
3. *கடுகு விதை:* தேவனுடைய இராஜ்யம் சிறிய அளவில் துவக்கம் பெற்று மிகப்பெரிய அளவில் வளர்ச்சியைக் காணும்.

4. *புளிப்பு:* தேவனுடைய இராஜ்யம் சமுதாயத்தினூடே வளர்ந்து பெருகும், நிலையான அமைப்பைப் பெறும்.
5. *மறைக்கப்பட்ட (புதைக்கப்பட்ட) பொக்கிஷம்:* இராஜ்யமும் அதின் சத்தியமும் முக்கியத்துவம் வாய்ந்த மதிப்புள்ளவை, அதின் புதைக்கப்பட்ட மங்கலான தோற்றத்திலும் கூட மதிப்புள்ளதே.
6. *விலைமதிப்புள்ள முத்து:* இராஜ்யத்தையும் அதின் சத்தியத்தையும் தளரா உழைப்புடன் தேடுமளவுக்கு தகுதியுள்ளவை.
7. *வலை:* இறுதி நியாயத்தீர்ப்பின் போது தேவனுடைய இராஜ்யத்தில் உண்மையான அங்கம் வகித்திருப்போரை வெளிப்படுத்தும்.
8. *வீட்டெஜமான்:* இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டு மனதில் இருத்திக் கொண்டு ஆவிக்குரிய முறையில் ஐசுவரியவனாகிறவன்.[6]

இந்த அதிகாரம் மிகவும் கவனமாக அமைவு பெற்றுள்ளது, முகவுரை உவமையும் முடிவுரை உவமையும் இடம் பெற்றுள்ளன. இயேசுவின் உவமைகளின் நோக்கத்தை இரண்டுமுறை சொல்லப்படுகிறது, இரண்டு உவமைகளுக்கு விளக்கம் அளிக்கப்படுகிறது. இந்த அதிகாரத்தின் மற்ற உவமைகள் மூன்று மூன்றுகளாக இரண்டுமுறை காணுகிறது. அதிகாரத்தின் பொருள் அடக்கம் பின்வரும் புறக்குறிப்புகளைக் கொண்டது:[7]

I. ஒரு முகவுரை உவமை: விதைக்கிறவன் (13:1-9)
II. ஒரு இடைச் செய்தி (13:10-23)
  A. உவமைகளின் நோக்கம் (13:10-17)
  B. விதைக்கிறவனைப் பற்றிய உவமையின் விளக்கம் (13:18-23)
III. மூன்று உவமைகள் (13:24-33)
  A. களைகளைப் பற்றிய உவமை (13:24-30)
  B. கடுகு விதை (13:31, 32)
  C. புளிப்பு (13:33)
IV. ஒரு இடைச் செய்தி (13:34-43)
  A. உவமைகளின் நோக்கம் (13:34, 35)
  B. களைகளைப் பற்றிய உவமையின் விளக்கம் (13:36-43)
V. மூன்று உவமைகள் (13:44-50)
  A. புதைக்கப்பட்ட பொக்கிஷம் (13:44)
  B. விலையுயர்ந்த முத்து (13:45, 46)
  C. வலை (13:47-50)
VI. முடிவுரை உவமை: வீட்டெஜமானன் (13:51, 52)

---

குறிப்புகள்

[1]காண்க நியாயாதிபதிகள் 9:7-20; 2 சாமுவேல் 12:1-14; 2 இராஜாக்கள் 14:8-14; ஏசாயா 5:1-7; 27:2-6; எரேமியா 13:1-11; எசேக்கியேல் 15:1-8; 17:1-10; 19:1-14; 23:1-49; இந்த உதாரணங்களில் சில நுணுக்கமாக ஞானார்த்தம் என்றோ, உவமையென்றோ, அல்லது புலம்பல் என்றோ அழைக்கப்படலாம். [2]David Hill, *The Gospel of Matthew,* The New Century Bible Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co.,

1972), 224. [3]Klyne R. Snodgrass, "Parable," in *Dictionary of Jesus and the Gospels*, ed. Joel B. Green and Scot McKnight (Downers Grove, Ill.: InterVarsity Press, 1992), 593. [4] *காண்க* Sirach 39:2; 47:17; *1 Enoch* 1.2, 3; *மற்றும்* Mishnah *Sotah* 9:15 *ஆகியவற்றை காண்க.* [5]*ஏழு என்று சொல்லுவோர் 13:52ஐ உவமையாகச் சேர்க்காமல் சொல்லுகிறார்கள், எட்டு என்று குறிப்பிடுவோர் அதையும் உவமையாகச் சொல்லுகின்றனர்.* [6]*விளக்கவுரையிலிருந்து பெறப்பட்ட* H. Leo Boles, *A Commentary on the Gospel According to Matthew* (Nashville: Gospel Advocate Co., 1936), 305. [7]*விளக்கவுரையிலிருந்து பெறப்பட்ட* R. T. France, *The Gospel According to Matthew*, The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 216.